(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.1/2015 |
| Deposition Of Witness for | : | PW7 |
| Name | : | **Thiru.Selvanayagam** |
| Father's Name | : | Duraisamy |
| Village | : | Aranthangi |
| Taluk | : | Aranthangi(Tk.) |
| Calling | : | |
| Age | : | 62 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **8th May 2025.**

(1வது எதிரி முன்னிலை, 2வது எதிரி முன்னிலையில்லை, அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது... It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929–A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் சேலம் மாவட்டம், சென்னை–கன்னியாகுமரி தொழிற்தடத்திட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் (நிலமெடுப்பு)–ன் கீழ் மறு குடியமர்வு அலுவலர்/துணை ஆட்சியர் (Resettlement Officer/Deputy

Collector) நிலையில் பணிபுரிந்து 31.03.2020–ம் தேதி பணிஓய்வு பெற்றேன். கடந்த 2012–ம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்தேன். சிவகங்கை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளரிடமிருந்து தேதி ஞாபகமில்லை 2012–ம் ஆண்டு எனக்கு தபால் வந்தது. திரு.சண்முகசுந்தரம் மற்றும் அவரது மனைவி மற்றும் மகன்கள் ஆகியோரது பெயரில் இச்சிக்கோட்டை கிராமத்தில் உள்ள நிலங்கள் மற்றும் வீடுகள் உள்ளனவா என்று கேட்டு தபால் வந்தது.

2. நான் அடங்கலின் நகல் எடுத்து சரிபார்த்து சுருக்கொப்பம் செய்து வட்டாட்சியருக்கு அனுப்பி வைத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் கோப்பில் உள்ள அனைத்து பக்கங்களிலும் அடிப்பகுதியில் உள்ள சுருக்கொப்பம் என்னுடையதுதான். அந்த **சுருக்கொப்பங்கள் அ.த.சா.ஆ–15 வரிசை** ஆகும். இவ்வழக்கு தொடர்பாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. அ.த.சா.ஆ–14 கோப்பில் உள்ள ஆவணங்கள் கேட்டு ஊழல்

தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளரிடமிருந்து எனக்கு நேரடியாக கடிதம் வந்ததா என்றால் இல்லை வட்டாட்சியர் பெயர் போட்டு வந்தது. அந்த கடிதத்தினை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த கடிதம் எத்தனை பக்கங்கள் கொண்டது என்றால் ஒரு பக்கம் கொண்டது. அந்த கடிதம் அ.த.சா.ஆ–14 கோப்பில் இல்லை என்றால் சரிதான், ஆனால் அலுவலக கோப்பில் உள்ளது. நான் எத்தனை வருடமாக ஆவுடையார்கோவில் தாலுகாவில் எத்தனை ஆண்டுகள் பணிபுரிந்தேன் என்றால் சுமார் இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தேன். எத்தனை ஆண்டுகளுக்கு சாகுபடி கணக்கு கேட்டு எனக்கு கடிதம் வந்தது என்றால் சுமார் 15 ஆண்டுகளுக்கு சாகுபடி கணக்கு கேட்டு கடிதம் வந்தது.

2. நான் அ.த.சா.ஆ–14 கோப்பினை தயார் செய்தேன் என்றால் ஆமாம். எவ்வளவு நாட்கள் கழித்து நான் கோப்பினை தாக்கல் செய்தேன் என்றால் சுமார் 3 வாரங்கள் கழித்து கோப்பினை தாக்கல் செய்தேன். இது தொடர்பாக நான் வேறு யாருக்கும் தகவல் கேட்டு கடிதம் அனுப்பினேனா என்றால் இல்லை. அ.த.சா.ஆ.14 கோப்பில் வேறு யாரெல்லாம் கையொப்பம் செய்தார்கள் என்றால் கிராம நிர்வாக அலுவலர், வட்டாட்சியர் மற்றும் நான் ஆகியோர் கையொப்பம் செய்தோம். அ.த.சா.ஆ–14 கோப்பில்

உள்ள ஆவணங்கள் எந்த ஆண்டு தயார்செய்யப்பட்டது என்றால் 2012, 2013-ம் ஆண்டு தயார் செய்யப்பட்டது.

3. மேற்படி இடத்தினை நான் நேரடியாக பார்வையிடவில்லை என்றால் சரிதான். அதனால் அந்த நிலங்களில் என்னென்ன பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னை போலிசார் விசாரித்தார்களா என்றால் ஆவணங்கள் வாங்கிய அன்று விசாரித்தார்கள். யார் விசாரணை செய்தது என்றால் காவல் ஆய்வாளர் விசாரணை செய்தார், அவரது பெயர் தெரியாது. நான் தாக்கல் செய்த அ.த.சா.ஆ-14 கோப்பில் உள்ள ஆவணங்கள் அனைத்தும் உண்மையான விபரங்களை கொண்டதல்ல என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை:**</u> இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2025.05.08 16:31:08 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.